ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ரு. விபவஹு ஆவணிமீ பகுதி அ.
Vol 5. *August & September 1928.* No. 8.

ஸ்ரீ விதுராழ்வான்.

"நீர்நுமதென்றிவை வேர்முதன்மாய்த்து" என்றபடி யானெனதென்ற புத்தியை அடியோடொழித்து ஸர்வேசுவரனே எல்லா உறவுமுறையுமாவா னென்றெருமுகும் பேரறிவாளரே ப்ரஹ்மஜ்ஞானியாவர். ஸ்ரீவிதுராழ்வானும் இத்தகைய ப்ரஹ்மஜ்ஞானியாகவே விளங்கினர். இவர் பேரறிவாற் சிறந்து நின்றுரென்பது பற்றியே விதுரர் என்ற பெயர்பெற்றனர். "ஞானகஞ்சுகவிதுரன்" என்று வில்லிபுத்தூராழ்வாரும் உரைத்தனர்.

கண்ணபிரான் பஞ்சபாண்டவர்கட்காக நூற்றுவர்பால் தூதாக எழுந்தருளியகாலத்துத் துரோணுசார்யர் 'நாம் ஜாதியால் உயர்ந்துளோமாதலால் கண்ணபிரான் நமது க்ருஹத்திற்கே விருந்தாக எழுந்தருள்வான்' என்று தம்முயர்குடிப்பிறப்பை முன்னிட்டு அஹங்கரித்திருந்தார். பீஷ்மாசார்யர், 'நாமறிவாற் சிறந்துளோமாதலால் கிருஷ்ணன் நம்மகத்திற்கே விருந்தாக எழுந்தருள்வான்' என்று தம்முடைய அறிவுடைமையாகிய சிறப்பை முன்னிட்டிருந்தார். துர்யோதனன், 'நாம் அரசுரிமை பூண்டுளோமாதலால் நம் மாமனைக்கே யாதவன் விருந்தாக எழுந்தருள்வான்' என்று தன்னுடைய செருக்கை முன்னிட்டிருந்தான். ஸ்ரீவிதுராழ்வான், 'நாமற்பவியல்பினமாதலால் நம் குடிசைக்குக் கண்ணபிரான் எழுந்

தருளமாட்டான்' என்று தம்முடைய அஜ்ஞதையை (அறியாமையை) முன்னிட்டிருந்தார். இங்கிலேயில் 'உள்ளுவாருள்ளிற்றெல்லா முட னிருந்தறி'யுமவனான கண்ணபிரான் பீஷ்மத்துரோணதியர் எதிர்கொண்டழைக்க அஸ்திநபுரம் வந்து 'நமக்குறவாவார் இவ்வூரில் விதுரரே' என்று திருவுள்ளம்பற்றி ஸ்ரீவிதுராழ்வான் திருமாளிகைக்கு எழுந்தருளினன். அப்பொழுது விதுரர்,

"உள்ளினனுணர்ந்துள்ளமுமுருகினனெழுந்து
துள்ளினன்விழுந்திணையடிசூடினன்றயரைத்
தள்ளினன்மலர்த்தடக்கையாற்றத்துவவமுதை
அள்ளினனெனக்கண்களாலருந்தினனளியோன்."

என்றபடி உள்ளங்கசிந்து ஆநந்தமுற்றுக் கண்ணபிரான் திருவடிகளைத் தம் சிரசிற் கணிகலமாகக்கொண்டு அவனது வடிவழகிலீடுபட்டு வைத்தகண்வாங்காமல் தரிசித்து நின்று,

"முன்னமேதுயின்றருளியமுதுபயோததியோ
பன்னகாதிபப்பாயலோபச்சையாலிலேயோ
சொன்னநால்வகைச்சுருதியோகருதிநீயெய்தற்கு
என்னமாதவஞ்செய்ததிச்சிறுகுடிலென்றான்"

என்றுரைத்தார். இவர் தம்மிருக்கைக்குக் கண்ணபிரான் நிர்ஹேதுக் கிருபையாலே எழுந்தருளி உஜ்ஜீவிக்கும்படி அநுக்ரஹித்தான் என்பதை இதனுல் நிரூபிக்கிறார். கருதி நீ எய்தற்கு முன்னமே துயின்றருளியமுதுபயோததியோ, கருதி நீ எய்தற்குப் பன்னகாதிபப்பாயலோ, கருதி நீ எய்தற்குப் பச்சையாலிலேயோ, கருதி நீ எய்தற்குச் சொன்ன நால்வகைச்சுருதியோ என்று கருதி நீ எய்தற்கு என்பதை எல்லாவற்றோடுங் கூட்டிப் பொருள்கொள்ளத் தக்கது. அசுரராக்ஷஸரால் துன்புறுத்தப்பட்ட பிரம்மாதிதேவர்கள் ஆர்த்தநாதங்கேட்டு அவர்களை ரக்ஷிக்கத் திருவுள்ளங்கொண்டு திருப்பாற்கடலில் அறிதுயிலமர்ந்தனே. உன் விஷயமான கைங்கர்யஞ்செய்தல்லது தரிக்கவொண்ணு நிலைமையையுடையவனென்றறிந்து திருவநந்தாழ்வானை அணையாகக்கொண்டருளினே. மஹாப்ரளயாந்தகாலத்தில் எல்லா உயிர் வர்க்கங்களையும் பிரளயவெள்ளம் அபகரித்துக்கொள்ளாமல் அவற்றையெல்லாம் உன் குக்ஷியில்

வைத்துக் காத்து உனது †அகடிதகடனா சாமர்த்தியந்தோன்ற ஒரு சிறிய ஆலிலையிற் பள்ளிகொண்டனை. 'நீ வேதத்தாலே அறியப்படுமியல்பினை என்பதை எல்லோருக்குந் தெரிவிக்கவேண்டுமெனக் கருதி வேதத்தை இருப்பிடமாகக்கொண்டாய். அன்றி வேதபுருஷன் தன்வாய்படைத்த பிரயோஜனம்பெற உன்னைத் தன்னாலியன்றவரை வாழ்த்தித் தன் ஸ்வரூபஸித்திபெறுதற்கு வேதத்தை அடைந்தனை. இக்குடிசைஅவற்றுள் ஏதேனுமொரு பொருளன்றே. அங்ஙனமிருக்க இக்குடிசைக்கு யாது கருதி எய்தினையோ? 'திருப்பாற்கடலிலும், திருவநந்தாழ்வானிடத்திலும், வடபத்திரத்திலும், வேதத்திலும் நாம் எய்திநின்றதினால் நமது க்ருபை, அகடிதகடனா சாமர்த்திய முதலிய குணங்கள் வெளியாயினவேயன்றி நமது எளிமைக் குணம் வெளியாகவில்லையே; இதற்கென்செய்வ'தென்று நெடுநாள் கருதியோ இக்குடிசைக்கெய்தினை. இக்குடிசை பெற்றபேற்றை என்னென்று சொல்வேன். அறப்பெரியனாகிய நீ இதையுமொரு பொருளாக மதித்து எழுந்தருளியதை நோக்குமிடத்து இதுவும் பெறலருந்தவம் செய்ததோவென்று ஒருவகையாற் கொள்ளக்கிடக்கிறது. உள்ளவாறாராய்ந்து பார்க்குமிடத்து, *இக்குடிசையை அதிஷ்டித்திருக்கிற ஆத்மா உன்னை ப்ரார்த்திப்பதற்குத் தனக்குத் தகுதியான காரணமில்லை. அதனால் அது பிரார்த்திக்க நீ எழுந்தருளினை என்று கொள்ளுதற்கிடமில்லையன்றோ! இதனால் உனது நிர்

---

† எல்லா வுலகங்களையும் தன் குக்ஷியில் வைத்துச் சிறிய குழவியாய்ப் பிரளய வெள்ளத்தில் முகிழ்விரியாத சிறிய ஆலிலையில் துயில்வதென்பது எவ்வாற்றானும் பொருந்தாத செயலாம். அங்ஙனம் பொருந்தாதிருப்பினும் தன் சக்தியால் பொருந்தும்படி செய்வதே அகடிதகடனா சாமர்த்தியமாம்.

* குடிசை அசேதனப் (அறிவற்ற) பொருளன்றோ! இவ்வஸ்துவுக்குச் சாஸ்த்ர வசப்பட்டிருப்பதொன்றில்லையாதலால் 'சிறுகுடில் என்ன மாதவஞ் செய்தது'என்பது எவ்வாறு பொருந்துமெனின்; பெயரையும், வடிவத்தையுமுடைய வஸ்துக்களுக்கெல்லாம் ஆத்மாவுண்டென்பது நமது ஸித்தாந்தத்தின் கொள்கையாதலால் பொருந்துமென்க. ஆனால் கடம் (பானை) படம் (வஸ்திரம்) முதலியவற்றில் ஆத்மாவிருப்பதுபோல் தோற்றாதிருப்பது மிகுந்த பாப பலத்தினால் அங்குள்ள ஆத்மாக்களுக்கு ஜ்ஞாநம் மழுங்கியிருப்பதனாலாகுமென்று கொள்ளத்தக்கது. இவ்விஷயத்தை உட்கொண்டே இங்குக் குடிசையை அதிஷ்டித்திருக்கிற ஆத்மா என்று குறிப்பிடப்பட்டது

ஹேதுக கிருபையே வெளியாகிறது; என்றார். இங்கு விதுரர் பகவத் ஸந்நிதியில் தம்மை அவஸ்துவாகக் கருதினாராதலால் தம்மைக் கண்ணபிரான் நிர்ஹேதுமாக விஷயீகரித்ததைக் குடிசையின்மேலேறிட்டு 'இச்சிறுகுடில் என்னமாதவஞ்செய்தது' என்று கூறினார். சேஷத்வஜ்ஞாநம் கைபுகுந்துள்ளார் தாமிருக்குமிருக்கையைக் குடிசை என்று வழங்குவர். அம்முறை பிறழாது இவரும் 'இச்சிறுகுடில்' என்றார். 'எனதுகுடில்' எனின் மமதா புத்தி தோன்றுமெனக்கருதி அதையுமொழிப்பதற்கு 'இச்சிறுகுடில்' என்று சுட்டியுரைத்தார்.

பின்னர் விதுரர், கிஞ்சித்கரித்தலில்லாதபோது ஸ்வரூபஸித்தியில்லையென்பதறிந்தவராகையால் கண்ணபிரானுக்கு மிகவு முகப்போடு விருந்தளித்தார். கண்ணபிரான் விதுரர், பரமபக்தியையுடையவராய் பிறிதோர் பிரயோஜனத்தை விரும்பாது அளித்த அமுதையுண்டு, "𑌵𑌿𑌦𑍁𑌰𑌾𑌨𑍍𑌨𑌾𑌨𑌿 𑌬𑍁𑌭𑍁𑌜𑍇 𑌶𑍁𑌚𑍀𑌨𑌿 𑌗𑍁𑌣𑌵𑌨𑍍𑌤𑌿𑌚" "விதுராந்நாநி புபுஜே சுசீநி குணவந்திச" * என்று பரிசுத்தமாயும், போக்யமாயுமிருந்ததென்று அருளிச்செய்தான். அதன்பின்னர் விதுரர் கண்ணபிரானை நோக்கி 'தேவரீர் யாது கருதி இங்கெழுந்தருளினீர்' என்று வினவியபொழுது கண்ணபிரான் 'பாண்டவர்கள் உரிமையை வாங்கித்தருவதற்குத் துர்யோதனன்பால் தூதாகவந்தேன்' என்றுரைத்து விதுரருடன் துர்யோதனன் ஸபைக்

---

* விதுரர், அஹங்காரமமகாரம் என்ற வாசனை சிறிது மற்றவராய் பரமபக்தியோடு விருந்தளித்தாராதலால் அது கண்ணபிரானுக்கு மிகவுமுகப்பாயிற்றென்பதைப் பெரியவாச்சான் பிள்ளை "நல்லத்தோர் சோறும்" என்பதற்கு வ்யாக்யானம் செய்கின்றவிடத்தில் அருளிச்செய்துள்ளார். அது வருமாறு:— "அநந்யப்ரயோஜனன் ஸ்வாமி விஷயத்திலிடுஞ்சோறு எங்ஙனேயிருக்குமென்னில்; "விதுராந்நாநி புபுஜே சுசீநி குணவந்திச" என்னும்படி பாவநமாயும், போக்யமாயுமிருக்கை, 'சுசீநி' என்றது சுத்தங்களாயிருக்கை. சோற்றுக்குச் சுத்தியாவது:— துர்யோதனன், தன் ஐசுவர்யத்தைப்பற்ற அபிமானித்தான்; பீஷ்மன் ஜ்ஞாநதிகனென்று அபிமானித்தான்; துரோணன், வர்ணத்தால் அதிகனென்று அபிமானித்தான்; இவையொன்றுமின்றிக்கே பக்த்யுபஹ்ருதமாயிருக்கை" என்பதாம்.

கெழுந்தருளினன். அப்பொழுது துர்யோதனன் கண்ணபிரானை நோக்கி,

* 𑌭𑍀𑌷𑍍𑌮𑌦𑍍𑌰𑍋𑌣𑌾𑌵𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌮𑌾𑌂𑌚𑍈𑌵 𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨 ।
𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌕𑍍𑌷 𑌭𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑍃𑌷𑌲𑌭𑍋𑌜𑌨𑌂 ॥

பீஷ்மத்ரோணுவதிக்ரம்ய மாம்சைவ மதுஸூதந
கிமர்த்தம் புண்டரீகாக்ஷ புக்தம் வ்ருஷல போஜநம்.

நீ பீஷ்மத்ரோணுதியரையும் உபேக்ஷித்ததோடு என்னுடைய க்ருஹத்திலும் உணவையுட்கொள்ளாமல் சூத்ராந்நத்தைப் புஜித்ததற்குக் காரணம் யாது? என்று விஞவினன். அதற்குக் கண்ணபிரான்,

𑌦𑍍𑌵𑌿𑌷𑌦𑌨𑍍𑌨𑌂 𑌨𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌷𑌨𑍍𑌤𑌂 𑌨𑍈𑌵𑌭𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌨𑍍 𑌦𑍍𑌵𑌿𑌷𑌸𑍇 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌮𑌮𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌹𑌿 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌃 ॥

த்விஷதந்நம் நபோக்தவ்யம் த்விஷந்தம் நைவபோஜயேத்
பாண்டவாந் த்விஷஸே ராஜந் மமப்ராணுஹி பாண்டவா:

---

* "𑌸𑌰𑍍𑌵𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍇 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌵𑌰𑍍𑌜𑌂" "ஸர்வ வர்ணாம் ஸ்வதர்மே வர்த்தமாநாநாம் போக்தவ்யம் சூத்ரவர்ஜம்" என்றும், "𑌪𑌕𑍍𑌵𑌂 𑌉𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟 𑌭𑍋𑌜𑌨𑌂" "பக்வம் உச்சிஷ்ட போஜனம்" என்றும் உரைக்கப்பெற்ற ப்ரமாணங்களால் சூத்ரனை ஒழிந்த ஒழுக்கமுடைய மற்ற வர்ணத்தவரிடத்தில் புஜிக்கலாமென்பதும், சூத்ரனல் பக்வஞ்செய்யப்பட்ட அந்நம் உச்சிஷ்டமாம் (எச்சலாம்) என்பதும் தெளிவாக அறியக்கிடக்கின்றமையால் இம்முறையைக் கைக்கொண்ட துர்யோதனன், கண்ணபிரானை நோக்கிப் பீஷ்மத்ரோணுதியர் க்ருஹங்களில் புஜிக்காதொழிந்ததென்ன? என் க்ருஹத்தில் உண்ணுதகன்றதற்குக் காரமென்னை? சூத்ராந்நத்தை உண்டதென்? என்று மூன்று கேள்விகள் கேட்டான். இந்த மூன்று கேள்விகளாலும் போந்தபொருளாவது:— கண்ணபிரான் சாஸ்த்ர முறைதப்பி நடந்தானென்பதே. அதற்குக்கண்ணபிரான் அவன்கேட்ட கேள்விகளுள் முதலிறுதிகளிலிருக்கின்ற இரண்டு கேள்விகளைவிட்டு இடையிலுள்ள கேள்வியாகிய "மாம்சைவ" என்பதற்கு மாத்திரம் பதிலுரைத்தால் அர்த்தபலத்தால் ஏனைய பூர்வோத்தரகேள்விகட்கும் பதில்கூறியதாய்விடுமென்ற கருத்தால் "த்விஷதந்நம் நபோக்தவ்யம்" என்ற சுலோகத்தால் விடையளித்தான்.

பகைவருடைய அந்நத்தை உட்கொள்ளலாகாதென்பதும்' பகைவரை உண்பிக்கலாகாதென்பதும் முறையன்றோ! நீ எனக்குப்ப்ராணங்களாயிருக்கின்ற பாண்டவர்கட்கு விரோதியாதலால் உன் க்ருஹத்தில் புஜிக்கவில்லை என்று விடையளித்தான்.

அதன்பின்னர் துர்யோதனன் விதுரரை நோக்கி 'என்னை வெல்லவேண்டும் என்கிற கருத்தினால் என்மனையில் உண்டியை மறுத்தவனாகிய கண்ணனுக்கு நீ உகந்து விருந்தளித்தனை; என் சோற்றையுண்டு எனக்கே வஞ்சனைபுரிகின்ற உனது செயலிருந்த

இதில் 'நீ, த்வேஷியாதலால் உன் க்ருஹத்திலும், பீஷ்மாதியர் உன் விஷயத்தில் பக்ஷபாதமுடையவர்களாயிருக்கின்றார்களாதலால் அவர்களிடத்திலும் புஜித்திலேன்' என்றான். இங்குப்போஜன நிவர்த்திக்கு த்வேஷத்தைக்காரணமாகச் சொன்னதினால் போஜனத்திற்குப் பக்தியதிசயம் ஹேதுவாமென்பது ஸித்திக்கிறது. அதனால் விதுரர் பரமபக்தராகையாலே அவருடைய திருமாளிகையில் புஜித்தல்கூடுமென்று அவன் கேட்டதற்குப்பதில் கூறியதாயிற்று.

இன்னும், துர்யோதனன் சாமாந்ய சாஸ்த்ரத்தை மேற்கொண்டு கேட்டதற்குக் கண்ணபிரான் "நசூத்ராபகவத் பக்தா:" (பகவத்பக்தன் சூத்ரனாகான்) என்ற விசேஷசாஸ்த்ரத்தை உட்கொண்டு பதிலுரைத்தானென்று அறியக்கிடக்கிறது. இவ்வுண்மையறியாத சிலர் கண்ணபிரான் 'விதுரர் சூத்ரரில்லை' என்று தன்வாயினால் தெளிவாக எடுத்துரைக்காததினால் துர்யோதனன் ராஜ்யாதிபத்ய கர்வத்தாற்செய்த பாகவதஜாதி நிரூபணத்திற்குப் பகவானிசைந்தானென்று சொல்லுவது பொருந்தாது. இங்கு "ராஜந்! பாண்டவாந் த்விஷஸே மம ப்ராணாஹி பாண்டவா:" என்றதனால் என்னுடைய பிராணங்களான பாண்டவர் கட்குச்சத்ருவாகையாலே எனக்குச் சத்ருவான உனக்குப் பீஷ்மத்ரோணாதியர் மித்ராகையாலே உன்னைப்போல அவர்களையும் நினைத்துவிட்டேன்; எனக்குப்ப்ராணபூதரான பாண்டவர்கட்கு விதுரர் ப்ராணபூதராகையாலே அவரை ப்ராணனாகவே நிச்சயித்து அவருடைய அந்நத்தைப்புஜித்தேன்; என்று பதிலுரைத்தானென்ற பொருளறியக் கிடக்கிறது. இஃதன்றி, விதுரரது பெருமையறியாது செல்வச் செருக்கினால் அவரது ஜாதிநிரூபணம் பண்ணிய மஹாபாபத்தால் 'நீ ராஜ்யப்ருஷ்டனாயொழிவது நிச்சயம்' என்பதை துர்யோதனனும், அங்குள்ளார்களும் நன்கறிந்து கொள்வதற்காக துர்யோதனனுக்குப் பலபெயர்களிருக்க அவற்றுள் ஏதேனுமொன்றையிட்டழைக்காமல் "ராஜந்" என்று அழைத்தான். இதனால் பாகவதாபசாரத்தின் க்ரூரத்தன்மையும் வெளிப்படுத்தினானென்றறியத்தக்கது.

வாறென்னே! நீ பொதுமகளிரிடத்திற் பிறந்தனையாதலால் அதற்கேற்ற குணம் உன்பால் நிறைந்திருக்கின்றன; இங்ஙனமிருக்க யான் உன்னை வெறுத்துரைப்பதால் போந்த ப்ரயோஜனமென்னே? என்று வாய்வந்தனசொல்லி முனிந்தான். அப்பொழுது விதுரர், 'துர்யோதனன் பகவத் பாகவத விரோதியாயிருக்கின்றான்; இவனது உறவையடியோடு ஒழித்துவிடவேண்டும்' என்றுஅந்தரங்கத்தில் கருதிக்கொண்டிருந்தவராதலால், இப்பொழுது தம்மை முனிந்ததே வ்யாஜமாகக்கொண்டு அவனைநோக்கி,

"இன்னவாறிவனுரைத்தபோதவனெழுந்திருந்தவசையென்னைநீ
சொன்னவாய்குருதிசோரவாள்கொடுதுளைத்துநின்முடிதுமிப்பன்யான்
மன்னவாகுருகுலத்திலேயொருவன்மைந்தனுருயிர்வௌவினன்
என்னவானவர்நகைப்பரேயெனைவுரைத்தநாவுடனிருத்தியோ"

பெரியோர்கள், 'மகனுயிரைத் தந்தைவௌவினான்' என்று என்னை இகழ்ந்துரைப்பார்களாதலால் 'இப்பொழுது வாய்கூசப்புற வசவுரை வழங்கிய உனதுயிரை மாய்க்காமல்விட்டேன்; இனி நடக்கப் போகிற யுத்தத்தில் உனக்கு ஒருபோதும் துணைசெய்யேன்' என்று பிரதிஜ்ஞைசெய்து ஸபைநடுவில் தமது சிறந்தவில்லை முறித்துச் சென்றனர்.

இது நிற்க; துர்யோதனன் கண்ணபிரானுக்குப் பொய்யாசனமிட்டு அவனை நிலவறையில் வீழ்த்தி ஒழிக்கக்கருதியபொழுது கண்ணபிரான் விசுவரூபமெடுத்து நிலவறையிலுள்ள வீரர்களையெல்லாம்கொன்று தன்னிலைமையை அங்குள்ளார்கட்கு அறிவித்து மறுபடியும் விதுரருடைய திருமாளிகைக்கெழுந்தருளினான். அப்பொழுது விதுரர், "𑌸𑌂𑌸𑍍𑌪𑍃𑌶𑍍𑌯𑌾𑌸𑌨𑌂 𑌶𑍌𑌰𑍇𑌃 𑌵𑌿𑌦𑍁𑌰𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌮𑌤𑌿𑌃" "ஸம்ஸ்ப்ருசந்நாஸநம் சௌரே: விதுரஸ்யமஹாமதி:" என்றபடி கண்ணபிரானுக்கு ஆஸநமிட்டு 'பொய்யாசனமிட்ட கொடியனாகிய துர்யோதனனுடைய ஸம்பந்தம் நமக்குமிருப்பதால் நாமுமொரு பொய்யாஸநமிட்டோமோ?' என்று தம்விஷயத்தில் தாமேசந்தேகங்கொண்டு அவ்வாசனத்தை நன்றாக அமுக்கிப்பார்த்தார். விதுரர் கண்ணபிரானுடைய ஸர்வசக்த்யாதி குணங்களையெல்லாம் நன்கறிந்தவராயிருந்தும் இச்செயலைச்செய்தனராதலால் இது,

பகவத் விஷயத்தில் தாம்கொண்ட பரமபக்தியினால் பரவச முற்றுத் தமது நிலைமையையும், ஸர்வசக்தியுடைய ஈசுவரனுடைய இடமை யையுமறந்து செய்தசெயலாகும். ஆதலால் இது, அஜ்ஞானத்தின் கார்யமாகாதென்பார் "மஹாமதி:" என்றார். பெரியாழ்வார் ப்ர வஸ்துவினுடைய ஸௌந்தர்யத்தில் ஈடுபட்டு அவ்வஸ்துவுக்குப் பல்லாண்டு பாடிக்காப்பிட்டது போன்றதாகும்; விதுரர் செய்த செயலுமென்றறியத்தக்கது.

இப்படி விதுரர் பரமபக்தராயிருந்து தம் வாழ்நாளைக்கழித் துத் திருநாட்டிற்கெழுந்தருளினர் அப்பொழுது தர்மபுத்திரர் 'இவரது சரமதிருமேனியை எவ்வாறு ஸம்ஸ்கரிப்பது?' என்று சந் தேகமுற்றகாலத்தில் 'இந்த விதுரர் யதியின் தன்மையினையுடைய ப்ரஹ்மஜ்ஞாநியாவார்; ஆதலால் இவரது திருமேனியை ப்ரஹ்ம மேதத்தால் ஸம்ஸ்கரிக்கத்தக்கது' என்று அசரீரிவாக்குத்தோன் றியது. அதுகேட்ட தர்மபுத்திரர் விதுரரது திருமேனியை ப்ரஹ்ம மேதத்தால் ஸம்ஸ்கரித்தார்.

பீஷ்மத்ரோணதியர், சாமாந்ய தர்மத்தை மேற்கொண்டு "ஒரு மெறாய நஸூ வாவாதா" . "துர்யோதநஸ்து பாபாத்மா" என்று நிந்திக்கப்படுபவனோடு உறவாடித் தம் வாழ்நாளைக்கழித்த னர். விதுரர், அங்ஙனங்கழிக்காமல் துர்யோதனனுடைய உறவை அடியோடொழித்ததோடு அஹங்காரகந்தம் சிறிது மில்லாது பரம பக்தியுடையவராய், ஈசுவரனுடைய க்ருபைக்குப்பாத்ரபூதராய் வாழ்ந்துபோந்தவராதலால் பாரதகாலத்தில் இவர் சிறந்த ப்ரஹ்ம ஜ்ஞாநியாய் விளங்கினரென்றறியத்தக்கது.

ப. அ.

ஶ்ரீ:

ஶ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[ஶ்ரீமதுபயவேதாந்த வித்வான் காரப்பங்காடு
சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(120-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி பகவதாராதன விஷயம் நிரூபிக்கப்படுகிறது. அதில் கிருஹார்ச்சனத்துக்கு கெண்டாநாதம் ஆவசியகமென்றும், அநாவசியகமென்றும் விவாதமிருப்பதால் அது முதலில் நிரூபிக்கப்படும்.

பராசரஸம்ஹிதை, பாரத்வாஜஸம்ஹிதை, சாண்டில்யஸம்ஹிதை இவைகளில் கெண்டையைப்பற்றிச் சொல்லவில்லை. பாகவதத்திலும் பதினோராவது ஸ்கந்தத்தில் கிருஹார்ச்சனவிதியிலும் கெண்டாநாதம்செய்யச் சொல்லவில்லை. ஶ்ரீபாஷ்யகாரரும் தாம் அருளிச்செய்த நித்தியத்திலும் சொல்லவில்லை. நடாதூர் அம்மாள் அருளிச்செய்த கிருஹாராதநகல்பத்திலுமில்லை. ஸ்மிருதிரத்நத்திலுமில்லை.

ஆனால் இவ்விடங்களிற் சொல்லாமலிருந்தாலும் "[illegible]" "அநுக்தம் அந்யதோக்ராஹ்யம்" என்கிற ந்யாயப்படி கெண்டாநாதமாவசியகமென்று சொல்லும் பக்ஷமானது, கெண்டாநாதத்திற்கு பூதாபஸரணபலத்தை உத்தேசித்ததாயிருக்கிறது. அந்த பூதாபஸரணமானது, "[illegible]" "உத்பதந்தீஹ பூதாயே ப்ரத்வ்யந்தரிக்ஷவாஸிந:, யேசாத்ர விக்நகர்த்தார: தேநச்யந்த்யாஜ்ஞயா ஹரே:" என்கிற வசநபடனத்தால் ஏற்படுகிறபடியால் அந்யதாஸித்தமாகையால் அநுபபந்நம். ஏனெனில் சிராத்தகாலத்தில், "[illegible]" "ஆயஸம்கண்டநாதஞ்ச" என்று கெண்டாநாதத்திற்கு நிஷேதமிருந்தபோதிலும், "[illegible]" "அபஹதா

ஸுரா" என்கிற மந்த்ரபடநத்தாலேயே பூதாபஸாரணம் ஏற்படுமோ அப்படியே இங்கேயும் ஏற்படும்.

மேலும், "த்ரவந்தி தைத்யா: ப்ரணமந்தி தேவதா:" "த்ரவந்தி தைத்யா: ப்ரணமந்திதேவதா:" என்கிற வசனத்தின்படி உத்தமாதிகாரியான ஸ்ரீவைஷ்ணவனிடத்தில் பூதாதிகள் வரப்ரசக்தியில்லாமையாலே கெண்டாநாதம் அநாவசியகம்.

மேலும், கெண்டாநாத மேற்படுகிறபக்ஷத்திலும் தெக்ஷிண ஹஸ்தத்தாலே தீபாதி ஸமர்ப்பிக்கும் ஸமயத்தில் வாமஹஸ்தத்தாலே கெண்டாநாதம் பண்ணுவது அநுசிதம். எனெனில், "தக்ஷிணாவர்த்தேந கர்த்தவ்யம்" "தெக்ஷிணாசாரேணகர்த்தவ்யம்" என்கிற ப்ரமாணத்தைக்கொண்டு கர்த்தவ்ய ஸாமாந்யம் தெக்ஷிண ஹஸ்தத்தாலேயே செய்யவேண்டுமென்றிருக்கிறபடியாலும், வைகுண்டநாதீயத்தில், கெண்டை, அக்ஷமாலை முதலியவைகளுக்கு ப்ரதிஷ்டை ப்ரோக்ஷணம் இவைகள் ஆவசியகமென்றிருப்பதால் அப்பிரதிஷ்டித கெண்டாநாதம் கூடாமையாலும் அநுபபந்நம்.

அப்ரதிஷ்டிதகெண்டாநாதம் கூடாதென்பதற்கு ப்ரமாணம். "ஸுஸம்ஸ்க்ருதாயா: ஸ்ருதிந: ப்ராஸாதே: ஸ்தாபநம் ஹவேத்। நிஷ்பலாவாபி வஜ்ராஸ்யாத் வரஸ்ய வரோத்தந:" "அஸம்ஸ்க்ருதாயா: சலிந: க்ராமாதே: சாலநம் பவேத், நிஷ்பலாசாபி பூஜாஸ்யாத் பரஸ்ய பரமாத்மந:" என்கிற ப்ரமாணங்களைக்கொண்டு ஆலயங்களில் ப்ரதிஷ்டித கெண்டாநாதநம் அங்கர்த்ருகமாகச்செய்யப்படுகிறபடியால் அவ்விடத்தில் கெண்டாநாதநம் உசிதமாகும். கிருஹார்ச்சனத்தில் அப்ரதிஷ்டித கெண்டாநாதநம் வாமஹஸ்தத்தால் செய்யவேண்டியிருப்பதால் அநுசிதம்.

வங்கிபுரத்துநம்பி ஆஹ்நிகத்திலும், பட்டர் ஸாதித்த கிரியாதீபத்திலும் கெண்டாநாதம் சொல்லியிருப்பது என்னென்னில், கிரியாதீபமென்கிற க்ருந்தம் பட்டருடைய திருவம்சத்தில் ஆறுவது பட்டர் அருளிச்செய்ததாக சரமசுலோக சந்திரிகையிலிருப்பதால் சாக்ஷாத் பராசரபட்டர் அருளிச்செய்ததன்று, ஸாக்ஷாத் பராசர பட்டர் அருளிச்செய்ததாக ஸச்சரித்ரபரித்ராணத்தில் ஸ்ரீஅண்ணு

வையங்கார்ஸ்வாமி அருளிச்செய்திருக்கிறார். அப்படியிருந்தபோதிலும் பட்டர் ஒரு ஸ்ரீவைஷ்ணவருக்கு திருவாராதனக்ரமத்தை விஸ்தரேண உபதேசித்துத் தாம் திருவாராதனம் பண்ணும்போது ஸங்க்ரஹித்துச் செய்தருளினதாகவும், அதைச் சில ஸ்ரீவைஷ்ணவர்கள் கேட்க அந்த அதிகாரிகளுக்கு அப்படியே உபதேசிக்க வேண்டும்; பூர்ணாதிகாரிகளுக்கு ஸங்க்ரஹித்துச்செய்வதேபோரும் என்று அருளிச்செய்ததாக பூர்வீக க்ரந்தங்களிருக்கிறபடியால் அது மந்தாதிகாரி விஷயம்.

கெண்டாநாதம் ஆவசியகமென்று அங்கீகரித்தாலும் அப்ரதிஷ்டித கெண்டாநாதம் வாமஹஸ்தத்தாலே செய்வது கூடாதாகை யால் அங்பகர்த்ருக ப்ரதிஷ்டித கெண்டாநாதமே சொல்லப்பட்டதென்று கொள்ளவேணும். அப்படிக்கில்லாமல் வாமஹஸ்தத்தாலே அப்ரதிஷ்டிதகெண்டாநாதம் சேய்விப்பதுகூடாதென்பது வ்பக்தம்.

இந்த பகவதாராதனத்தில் ஆழ்வார்கள் முதலான ஆசார்யர்களுடைய ஆராதனமும் முக்யம். அதற்கு ப்ரமாணம் ஸ்ரீவைகுண்டநாதீயத்தில், "𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑍍 𑌶𑌠𑌕𑍋𑌪𑌾𑌦𑍀𑌨𑍍 𑌪𑍂𑌜𑌯𑍇𑌦𑍍𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍋𑌤𑍍𑌤𑌮𑌃" "மத்பக்தாந் சடகோபாதீந் பூஜயேத் வைஷ்ணவோத்தம:" என்றும், "𑌶𑌠𑌾𑌰𑌿 𑌪𑌰𑌕𑌾𑌲𑌾𑌦𑌿 𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑍍 𑌸𑌂𑌪𑍂𑌜𑌯𑍇𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌃" "சடாரி பரகாலாதி பக்தாந் ஸம்பூஜயேத்விஜ:" என்றும், "𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤 𑌶𑌠𑌕𑍋𑌪𑌾𑌦𑌿 𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑍂𑌜𑌨𑍇𑌨 𑌤𑍁। 𑌶𑌠𑌾𑌰𑌿 𑌪𑌰𑌕𑌾𑌲𑌾𑌦𑌿 𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃। 𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍃𑌤𑌿𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌲𑍍𑌲𑍋𑌹𑌶𑍈𑌲𑌮𑍃𑌦𑌾𑌦𑌿𑌭𑌿𑌃" "மத்பக்த சடகோபாதி பக்தாநாம் பூஜநேநது, சடாரி பரகாலாதி பக்தாநாம்துவிசேஷத: மூர்த்தி ப்ரதிக்ருதிம் குர்யாத் லோஹசைல ம்ருதாதிபி:" என்றும் நாராயண ஸம்ஹிதை, விஷ்ணுதத்வம், சாண்டில்யஸம்ஹிதை, பராசர ஸம்ஹிதை, இவற்றிலிருப்பதால் ஆழ்வார்கள் முதலான ஆசார்ய விக்ரஹங்களை லோஹத்தாலேயாவது, சிலையினாலேயாவது, மிருத்தாலேயாவது எழுந்தருளப்பண்ணி ப்ரதிஷ்டைசெய்து ஆராதிப்பது சாஸ்த்ர ஸித்தம்.

ப்ரஸங்காத் இவ்விடத்தில் ஆழ்வார்களுக்கு நிவேதிதமான அந்நத்தைக்கொண்டு சிராத்தம் செய்கிற விஷயம் நிரூபிக்கப்படும்.

ஆழ்வார்களை அபிநவதசாவதாரமாக தேசிகன் அருளிச்செய் திருக்கிறபடியால் பகவதவதாரபூதர்களான ராமகிருஷ்ணுத்யர்ச்சா விக்ரஹங்களுக்கு நிவேதிதமான அந்நம் எப்படி சிராத்தார்ஹமோ அப்படியே இதுவும் கூடும். அதுவுமன்றி, உசனஸ்மிருதியில் "[illegible]" "விஷ்ணவே கல்பிதஞ்சாந்நம் தத்யாத் பக்தேப்ய ஏசவ, வைச்வதேவம்தத: குர்யாத் ச்ராத்த கர்மாதிகம்ததா" என்று பக்தநிவேதிதமான அந்நத்தைக்கொண்டு சிராத்தம் செய்யலாமென்றிருப்பதாலும், பகவந் நிவேதிதமான அந்நத்தைக்கொண்டு செய்யவேணுமென்கிற வசனத்திலும் ஸபரிவார பகவந் நிவேதிதமான அந்நத்தைக்கொண்டு செய்யவேணுமென்று அர்த்தம் கொள்ளவேண்டுகையாலும், பரிவார பூதர்களான ஆழ்வார் முதலான ஆசார்ய விக்ரஹங்களுக்கு நிவேதிதமான அந்நத்தைக்கொண்டு சிராத்தம் செய்யலாம்.

ராமகிருஷ்ணுத்யவதாரங்களில் அந்த திவ்ய மங்கள விக்ரஹங்கள் அப்ராகிருதங்களாகையாலே ப்ராஹ்மணத்வ க்ஷத்ரியத்வ ஜாதி முதலானவைகளில்லாதிருப்பதுபோல் ஆழ்வார்கள் அபிநவ தசாவதாரமென்று சொல்லுகிறபக்ஷத்திலும் ஜாதி முதலானதுகளில்லாமையாலே ஜாதி ப்ரயுக்தநிகர்ஷத்தைக்கொண்டு தந்நிவேதாந்நத்தால் செய்யலாகாதென்பதும் அநுசிதம்.

மேலும், "[illegible]" "யதந்ந: புருஷோபவதி ததந்நா: ஸ்தஸ்யதேவதா:" என்பதால், எந்த அந்நம் புருஷனுக்கு விஹிதமோ அந்த அந்நத்தைக்கொண்டே தேவதைகளை ஆராதிக்கவேண்டுமென்று சொல்லியிருப்பதாலும், "[illegible]" "பகவத் புக்தசேஷம்யத் புக்தம் பாகவதைநயத், ததேவபோக்ய முத்திஷ்டம் பகவத்பாகவேஸவிபி:" என்று பகவத் பாகவத புக்தசேஷமே இவனுக்கு அந்நமாகையால் அந்த அந்நமே பித்ருதேவதைகளுக்கும் போஜ்யமாகும்.

சிலர் சிராத்தம் பித்ருசரீரக அந்தர்யாம்யாராதனரூபமாகை யாலே அதில் பராங்குசாதிநிவேதிதான்நம் கூடாதெனச் சொல்லுவர் கள். அப்போது நித்ய போஜனமும் அந்தர்யாம் யாராதனரூபமாகை யாலே சிராத்தபின்னகாலங்களில் நித்யமான ஆராதனத்திலும் பராங் குசாதி நிவேதநாநுபபத்தி ஏற்படும். அது ஸ்வாநுஷ்டாந விருத்தம்.

மேலும், நம்முடைய ஸித்தாந்தத்தில் எல்லாம் அந்தர்யாம் யாராதநரூபமாகையால் பராங்குசாத்யாராதநமும் பராங்குசாதி சரீரக பகவதாராதநமாகையாலே பராங்குசாதி நிவேதநம் சிராத்த காலத்திலும் கூடும்.

சிராத்தகாலத்தில் பிராட்டிக்கு நிவேதிதமான அந்நத்தைக் கொண்டு சிராத்தம் செய்யக்கூடாதென்று சில ஸம்பிரதாயஸ்தர் கள் சொல்லுமதுவும், பிராட்டி ஈசுவரகோடி கடிதையென்றும் மோக்ஷ ப்ரதத்வாதிகளுண்டென்றும் சொல்லுவதற்கு நேர்விருத்த மாம்.

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவ வித்வத் ஸபையின் விவரணம்.

பெருமாள்கோயில் [காஞ்சீபுரம்] பிரதிவாதி பயங்கரமடாதிபதி ஸ்ரீமதநந்தாசார்யஸ்வாமிகளின் முயற்சியால் ஷெ ஸபை காஞ்சீ புரத்தில் நடைபெறும் விஷயம் ஏற்கனவே பத்திரிகைகளில் பிரசுர மாயிருப்பதால் அனைவருமறிந்ததே விசிஷ்டாத்வைதஸம்ப்ரதாயத் தில் வாதப்ரதிவாதரீதியில் கோடிக்ரமங்கள் சொல்லி மதாந்தரங் களைக்கண்டித்து ஸித்தாந்தஸ்தாபநம்செய்யக்கூடிய வித்வான்களை அபிவிருத்திசெய்யவேணுமென்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு முதன்முதலாக ஸ்ரீஸ்வாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட இந்த வித்வத்ஸபை சென்ற ஆடிமாதம் 26உ முதலாக ஆறு நாட்களில் இடையூறின்றி நடைபெற்றது.

இந்தஸபை இவ்வருஷமே புதிதாகத் தொடங்கப்பட்டபடி யாலும், கோடிக்ரமங்கள் சொல்லத்திறமைபெற்ற வித்வான்களுக்கு

மாத்திரமே இதில் ப்ரவேசம் உரியதாயிருந்தபடியாலும், சில நாட்களாகக் காஞ்சீபுரம் ஸமீபத்தில் ஏற்பட்ட ரெயில்வேபோக்குவரத்து ஸௌகர்யக்குறைவினாலும் இவ்வருஷம் ஷை ஸபைக்கு ஸுமார் 15 வித்வானகளே எழுந்தருளியிருந்தார்கள்.

(அவர்களின் திருநாமம்.)

ஸ்ரீஉ. வே. மஹாமஹோபாத்யாய லக்ஷ்மீபுரம் ஸ்ரீனிவாஸாசாரியர் மைஸூர் 1, தேவசிகாமணிராமானுஜாசாரியர் திருநாராயணபுரம் 2, தூக்கிப்பள்ளி திருமலாசாரியர் பெங்களூர் 3, ஸ்ரீனிவாஸாசாரியர் பெங்களூர் 4, தி. அ. அய்யனய்யங்கார் மைஸூர் 5, தேசிகவரதாசாரியர் சென்னை 6, பஹுகுடும்பி வரதாசாரியர் திருவல்லிக்கேணி 7, திருமங்கலம் நரஸிம்மாசாரியர் திருவல்லிக்கேணி 8, விளக்குடி ஸ்ரீனிவாஸாசாரியர் மைலாப்பூர் 9, தி. அ. பு. கிருஷ்ணமாசாரியர் திருப்பதி 10, உத்தமசேரி ரங்க்ஸாமி ஐயங்கார் ஸ்ரீரங்கம் 11, இஞ்சிமேடு ரங்கநாதாசாரியர் காஞ்சி 12, இளங்காடு ரங்காசாரியர் காஞ்சி 13, அய்யாகிருஷ்ணஸ்வாமி தாதாசாரியர் காஞ்சி 14, மு. அ. திருவேங்கடாசாரியர் காஞ்சி 15, பு. திருவேங்கடாசாரியர் காஞ்சி 16, காண்டூர் பாஷ்யகாராசாரியர் காஞ்சி. 17.

இன்னும் சிலபண்டிதர்களும் ஸபையிற் கூடியிருந்தனர். பிரதிதினமும் பகல் 2மணிக்கு ஸபை ஆரம்பிக்கப்பட்டு வந்தது. ஸபையின் கார்யக்கிரமம் இருவகையாக வகுக்கப்பட்டது. அதாவது வித்வான்களுக்கே உரியவாதகோஷ்டி நடத்துதல் ஒன்று; ஸர்வ ஜனங்களுக்கும் உபயுக்தமாம்படி தர்மஸம்பந்தமான உபந்யாஸங்கள் நடத்துதல் மற்றொன்று இவ்விதமாகவே ஆறுநாளும் வாக்யார்த்த கோஷ்டியும், உபந்யாஸகோஷ்டியும் அழகாக நடந்தன. இரண்டு மணிமுதல் ஐந்துமணிவரையில் வாக்யார்த்தகோஷ்டி ஸ்ரீஸ்வாமிகளின் ஆஸ்தானமடத்திலும், அதற்குமேல் 7-மணிவரை உபந்யாஸ கோஷ்டி ஸ்ரீபிரதிவாதிபயங்கரம் அண்ணாஸந்நிதியிலும் நடத்தப்பட்டுவந்தது.

கூடியிருந்த வித்வான்கள் பலமதங்களில் பலவிஷயங்களைப் பற்றி வாக்கியார்த்தங்கள் நடத்திப்பரமாநந்தமடைந்தனர்.

இரண்டாநாளில் சென்னை வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் (B. A., B. L.,) ஸ்வாமி ஷஸபைக்கு எழுந்தருளியிருந்து ஸ்ரீ ஸ்வாமிகளின் அரியபெரிய அமுதமொழிகளைப்பருகி, தாமும் அருமையான சில அபிப்பிராயங்களை வெளியிட்டு ஸபையோர்களை மகிழ்வித்தார்.

மறுநாள் ஸ்ரீமான். உ. வே. திவான் பஹதூர், டி. ரங்காசாரியர் ஸ்வாமியும், ஸ்ரீமான் (ஆநந்தாபிரஸ் தலைவர் ராவ்பஹதூர்) வேமூர் ரங்கநாதச் செட்டியாரும் ஸபைக்கு விஜயம் செய்திருந்தனர். ரங்காசாரியர் ஸ்வாமிகள் ஸபையிலிருந்த ஒவ்வொரு வித்வான்களையும் தனித்தனிஒவ்வொரு விஷயத்தைப்பற்றி ஸாரமாக ஸம்ஸ்கிருதத்தில் உபந்யஸிக்கும்படி கேட்டுக்கொண்டதின்மேல் அப்படியே அனைவராலும் உபந்யஸிக்கப்பட்டதில் ஸபைக்கு அதுவொரு விசேஷித்த ஆநந்தமாக அமைந்தது.

இவ்வண்ணம் பரமாநந்தமயமாக நடைபெற்ற இந்த வித்வத் ஸபையில் வாக்யார்த்த கோஷ்டியிலும் உபந்யாஸகோஷ்டியிலும் ஸ்ரீஸ்வாமிகளின் நிகரற்ற திறமையைக்கண்டு உகப்பும் வியப்பும் அடையாதாரில்லை.

ஸபை முடியும் தினத்தில் கீர்த்திபெற்ற நேபாளராஜாவின் தலைமைமந்திரி பெங்களூரிலிருந்து விஜயம் செய்திருந்து ஸபையில் கலந்துகளித்து ஸ்ரீஸ்வாமிகளின் அநுக்ரஹத்துக்கு இலக்காகிச் சென்றனர்.

ஸாமான்யசாஸ்திரங்களிலும் வேதாந்த ஸம்ப்ரதாயங்களிலும் வல்லமைபெற்ற வித்வான்களுக்கும், முன்னேற்றமடைய விருப்பும் மாணுக்கர்கட்கும் பரமோபகாரகமாயுள்ள இந்த வித்வத் ஸபை நீடூழிவாழவேணுமென்ற கரகோஷங்களுடன் 15—8—28உ இரவு 8-மணிக்கு வித்வத்ஸம்மானம் நடந்து ஸபைதலைகட்டிற்று.

இங்ஙனம்,

☞ ப்ர அண்ணங்கராசார்யதாஸன்,

ஸ்ரீஸ்வாமிகளின் திருவடி.

ஸ்ரீ:

மதிப்புரை.

தத்வத்ரயப்ரமாணத்திரட்டு:— என்ற இந்நூல் திருக்குடந்தை திருப்புறம்பயம் ஸ்ரீமான் T. D. இராமஸ்வாமி ராமாநுஜதாஸரவர்களால் இயற்றப்பெற்றது. பரமகாருணிகரான பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த பதினெண் ரஹஸ்யங்களுள் தத்வத்ரயம் என்பதுமொன்றும். மோக்ஷத்தில் விருப்புடையவர்களாகிய முமுக்ஷுக்களுக்குச் சித்து, அசித்து, ஈசுவரன் என்ற தத்வத்ரயஜ்ஞாநம் அவசிய முண்டாகவேண்டுமென்று இந்நூலில் வலியுறுத்தப்படுகிறது. இந்நூலிற் பொதிந்துள்ள அரியபெரிய விஷயங்களின் உண்மைப்பொருளையறிந்து கொள்வதற்கு விசதவாக்சிகாமணியாகிய மணவாளமாமுநிகள் இதற்கு ஓர் வியாக்யானம் அருளிச்செய்துள்ளார். இது, மிகவும் திட்பநுட்பமுடையதாயிருக்கும்பெருமையை நோக்கி இதைக் குட்டிபாஷ்யம் என்று வழங்குவர். இந்த வ்யாக்யானத்தில் மேற்கோளாக எடுத்தாளப்படுவன சுருதி, உபநிஷத், ப்ரஹ்மசூத்ர முதலியவைகளாம். இவற்றின் பொருளறிந்தாலன்றி இதன் உண்மையறியலாகாதென்பதை யாவருமறிவர். இத்தகைய ப்ரமாணங்கட்கு இவர் உரையெழுதி வெளியிட்ட உதவி பெரிதும் பாராட்டத்தக்கதே. ஸ்ரீவைஷ்ணவஸமயாசாரமுடையார் இந்நூலை வாங்கிப்பயில்வதற்குக் கடமைப்பட்டவராவார். வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுகொள்க.

விலாசம்:—

☞ **T. D. இராமஸ்வாமி நாயுடு,**

திருப்புறம்பயம் போஸ்டு,

கும்பகோணம்.